1982 பிப்ரவரி 8]

கோயம்புத்தூர் அருகே கணபதியிலுள்ள டெக்ஸ்டூல் நிறுவனம்.

* வினா எண் 99— திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அடுத்துள்ள கணபதியில் உள்ள டெக்ஸ்டூல் கம்பெனியை தமிழக அரசு நிர்வாகம் செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், தற்சமயம் அது இலாபகரமாக நடைபெற்று வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் அரசின் நிர்வாகத்தில் இருந்த டெக்ஸ்டூல் நிறுவனம் 1976 ஆம் ஆண்டு முதல் இலாபகரத்துடன் செயல்படத் துவங்கியதால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நிர்வாகத்தை மீண்டும் நிறுவனத்திடமே அரசு ஒப்படைத்தது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்தை நிறுவனத்திடம் ஒப்படைத்த பிறகு நிர்வாகத்தை அரசு நடத்தியபோது இருந்த இலாபத்தை விட, தற்போது அதிகமாக இலாபம் கிடைத்துள்ளதா, அல்லது குறைவாகக் கிடைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதனுடைய இலாபம் உயர்ந்து கொண்டே போகிறது நலிந்த நிலையிலிருந்த அந்தக் கம்பெனியை அரசாங்கம் தமிழக நிவாரணச் சட்டத்தின் கீழ் ஏற்று நடத்தியது. இப்போது அது நல்லமுறையில் நடைபெற்று, இலாபம் ஈட்டுகின்ற நிலைமையில் இருப்பதால் அந்த நிவாரணச் சட்டத்தின்படி திருப்பிக் கொடுத்துவிட்டோம். இனிமேல் வரும் இலாபம் அந்த நிர்வாகத்தைச் சேர்ந்தது. அரசாங்கத்தில் இருக்கிற கணக்குப்படி ஆண்டுதோறும் இலாபம் உயர்ந்து கொண்டே போகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நலிந்துபோன அந்தக் கம்பெனியை அரசு எடுத்துநடத்தி, இலாபகரமாக ஓட ஆரம்பித்த பிறகு மீண்டும் அந்த முதலாளிகளிடத்திலே ஒப்படைப்பது என்பது அரசினுடைய அடிப்படையான நோக்கத்தையே தகர்த்து விடுகிறது. துயர் துடைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்று நடத்தி, இலாபகரமாக செயல்பட்ட பிறகு கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். இருந்தாலும் இப்படிச் செய்வதால் என்ன பயன் ? அரசாங்கத்திற்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும்,

இப்போது திருப்பிக்கொடுத்திருப்பது அந்தக் கம்பெனியின் பழைய முதலாளிகளிடமா அல்லது அரசின் சார்பிலே அங்கே மானேஜிங் டைரக்டராக நியமிக்கப்பட்டிருந்தவரிடமா? அந்த மானேஜிங் டைரக்டர்தான் இப்போது முதலாளியாக வந்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நலிந்துபோன நிறுவனங்களை ஏற்று நடத்தி, அவை நல்லமுறையில் செயல்படத் தொடங்கிய பின்னால் அந்த நிர்வாகங்களிடமே திருப்பிக் கொடுக்க தமிழக நிவாரணச் சட்டத்தில் இடமிருக்கிறது. அதன் நோக்கமே இப்படி நலிந்து கொண்டிருக்கிற தனியார் நிறுவனங்களை அரசாங்கம் ஏற்று நடத்தி, அவை நலிந்து போகாமல் பாதுகாப்பதற்கும், அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கும் தான். அந்த அடிப்படையிலே இந்தக் கம்பெனியையும் அரசு ஏற்று நடத்தியது. நல்லமுறையில் செயல்பட்டு, இலாபகரமாக செயல்பட்டுவந்த காரணத்தால் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ளும்போது யார் இருந்தார்களோ அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு அமைச்சர் பதில் அளிக்கவில்லை. அந்தக் கம்பெனி பழைய முதலாளியிடம் ஒப்படைக்கப்படவில்லை. அங்கே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மானேஜிங் டைரக்டர் தான் இன்றைக்கு அந்தக் கம்பெனியின் சொந்தக்காரராக இருக்கிறார். அவர் நிர்வாகத்தைக் கவனிக்க அரசால் நியமிக்கபட்டவரே அல்லாமல் அந்தக் கம்பெனியின் முதலாளி அல்ல. இப்போது அவர் முதலாளியாக வந்திருக்கிறார் என்பது உண்மையா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த நிர்வாக இயக்குநர்களிலே அவரும் ஒருவராக இருந்தார். அவருக்கு அந்தத் தொழிற்சாலையில் எவ்வளவு பங்கு இருந்தது என்ற விவரம் இல்லை. வேண்டுமானால், தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டூல் கம்பெனிக்கு அரசு மூலதனமாக எவ்வளவு பங்குத் தொகை செலுத்தியிருக்கிறது? அரசின் பிரதிநிதி யாராவது அதிலே அங்கம் வகிக்கிறாரா? அப்படி இல்லை என்றால், அரசின் பிரதிநிதி ஒருவர் அங்கே அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கெனவே 1975-ல் இதற்கு 40 இலட்சம் ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போல டி.ஐ.ஐ.சி. மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாகத்தை திருப்பி ஒப்படைக்கும்போது அதற்கு வழங்கப்பட்ட கடன், வட்டி, அரசுக்கு வரவேண்டிய கடன் உட்பட அனைத்தும் வந்து விட்டன. எல்லா பணமும் வந்தபிறகுதான் திருப்பி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. டி.ஐ.ஐ.சி. கடன் வழங்கும்போது அரசின் சார்பிலே ஒரு இயக்குநர் நியமிக்கப்படுவது வழக்கம். அது நடை முறையில் இருக்கிறது.

கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

* வினா எண் 100—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் கரும்பாறைகளை அறுத்து மெரு கேற்றும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எங்கு நிறுவப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் 2 கோடி ரூபாயாகும். எங்கு அமைக்க வேண்டும் என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப் படவில்லை. சென்னைக்கு அருகாமையில் இருப்பதே நலம் என்று கருதி, அந்த வகையிலே இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மெருகேற் றப்பட்ட இந்தக் கற்கள் எந்தெந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன ? வெளி நாடுகளிலிருந்து இந்தக்கற்களை அனுப்ப வேண்டுமென்று நம்மிடம் கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அதிலே இன்றுவரை ஏறக் குறைய 1 கோடி ரூபாய் டர்ன் ஓவர் இருக்கின்றது. இலாபமும் ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகின்றது. ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்கனவே இந்தக் கரும்பாறை ஏற்றுமதி